1974 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சூரியகாந்தியில் கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதால் உடல் நலத்திற்கு ஏற்றது என்று சொல்வார்கள். அது வனஸ்பதித் தொழிற்சாலையிலும் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. அதற்கு நல்ல விலையும் இருக்கிறது, தற்போது.

திரு. கோவை செழியன்: தமிழ்நாட்டில் பயன்படுத்துகின்ற எண்ணெய் வகைகளில் பெரும்பாலும் தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றில் நிறைய குல்ஸ்ட்ரால் சத்து குறிப்பாக இருப்பதால் இருதய நோய் வந்து திடீர் திடீர் என்று சாகிறார்கள். ஆனால், சூரியகாந்தி (சன் ப்ளவர்) போன்றவற்றின் எண்ணெயில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் கொழுப்புச் சத்து இல்லாமல் இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்வதால் இதை ஊக்கப்படுத்த அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சூரியகாந்தி பயிரிடுவதை ஊக்கப்படுத்துவதாக நான் ஏற்கனவே சொன்னேன். திடீரென்று மாரடைப்பு வருவது என்பது தமிழகத்தில் மிகக் குறைவு. மேற்கு நாடுகளில் சோயாபின்ஸ் பயிரிடுகிறார்கள். இங்கே சூரிய காந்தி விதைக்கின்றபோது 60 சதவீதம் தான் நல்ல விதைகள் கிடைக்கின்றன. நூற்றுக்கு நூறு விதை உண்டாகவேண்டுமென்றால் தேன்கூடு ஒன்றையும் அந்தத் தோட்டத்தில் வைக்க வேண்டும். பொதுவாக சூரியகாந்தி பயிரிடுகிறவர்கள் அங்கேயே தேன்கூடு ஒன்றையும் வைக்க ஏற்பாடு செய்தால் அவை அருமையாக விளையும்.

Sale of vegetables

*327 Q—Thiru R.R MUNUSAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to have a regulated market for vegetables in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:

(அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 503–506-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Vegetable market has been opened at Government Estate but it is in a hopeless state of affairs. Will the Government do something to set it right?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பற்றியது. காய்கறிகள் பெரிஷபுள் குட்ஸ் ஆனதால் ரூ. 22.5 லட்சத்தில் ஆங்காங்கே குளிர்பதன சாதன அமைப்பை ஏற்படுத்தவும் யோசிக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : புதியதாகத் தொடங்க இருக்கிற ரெகுலேடட் மார்க்கெட் காய்கறிக் கடைகள் கவர்மெண்டு எஸ்டேட் காய்கறிக் கடையின் கதிக்கு ஆளாகாமல் இருக்க தக்க பாதுகாப்பு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கவர்ன்மெண்டு எஸ்டேட் காய்கறிக் கடை நிலைமை வேறு. அங்கே சரியாக விளைவதில்லை. காரணம், போதுமான தண்ணீர் வசதியில்லை. வெளியில் இருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : ரெகுலெடெட் மார்க்கெட் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று தான் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள். அதை அமல் படுத்தத் தயாராக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சட்டத் திருத்தம் ஆய்வில் இருக்கிறது.

Sevices of employees of Local Bodies

*287 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the Tamil Nadu Municipal and Corporation workers have submitted a memorandum to the Government during 1973 regarding fixing of wages, service conditions; and

(b) if so, the action taken thereon?